# சிறுபான்மையினர் நலம்

இந்த அமைச்சகத்திற்கான இந்திய அரசின் (செயல்பாட்டு விதிமுறைகள்) 1961 இன் படி ஒதுக்கப்பட்டுள்ள செயல்பாட்டு விதிமுறைகள் பின்வருவனவாகும்:

i) சிறுபான்மையினருக்கான ஒட்டுமொத்தமான கொள்கை, திட்டமிடல், ஒருங்கிணைப்பு, மதிப்பீடு மற்றும் சிறுபான்மை சமூகங்களின் ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு திட்டங்களின் மீளாய்வு.

(Ii) சட்டம் ஒழுங்கு தொடர்பான விசயங்கள் தவிர சிறுபான்மை சமூகங்கள் தொடர்பான அனைத்து விஷயங்கள்.

(Iii) மத்திய அரசின் இதர அமைச்சரவைகள் மற்றும் மாநில அரசுகளுடன் கலந்து ஆலோசித்து சிறுபான்மையினர் நலம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த புதிய கொள்கைகளைக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

(Iv) மொழிவாரி சிறுபான்மையினர் தொடர்பான விஷயங்கள் மற்றும் மொழிவாரி சிறுபான்மையினருக்கான ஆணையர் அலுவலகம் தொடர்பான விஷயங்கள்.

(V) சிறுபான்மையினர் சட்டத்திற்கான தேசிய ஆணையம் தொடர்பான விஷயங்கள்.

(Vi) புலம் பெயர்ந்தோர் வஃப் சொத்துக்கள் சட்டம் 1950 (எண் 31) (நீக்கப்பட்டதிலிருந்து) - நிர்வாகத்தின் கீழுள்ள புலம் பெயர்ந்தோர் வஃப் சொத்துக்கள் தொடர்பான பணிகள்.

(vii) ஆங்கிலோ-இந்தியன் சமூகத்தின் பிரதிநிதித்துவம்.

(Viii) பண்ட்-மிர்சா ஒப்பந்தம் 1955 ன்படி பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமியம் சாராத புனிதத்தலங்கள் மற்றும் இந்தியாவிலுள்ள இஸ்லாமியப் புனிதத்தலங்களை வெளிவிவகார அமைச்சகத்தின் ஆலோசனையுடன் பாதுகாத்து பராமரித்தல்.

(IX) வெளிவிவகார அமைச்சகத்தின் ஆலோசனையுடன் அண்டை நாடுகளில் சிறுபான்மைச் சமூகங்கள் தொடர்பான கேள்விகள்.

(X) இத்துறையால் கையாளப்படும் அறச்செயல்கள் மற்றும் அத்தகைய அமைப்புகள், ,பெறப்படும் பொதுவான மற்றும் மதம் சார்ந்த நன்கொடைகள் சார்ந்த விஷயங்கள் மற்றும் செயல்பாடுகள்.

(Xi) சிறுபான்மையினர் மற்றும் மவுலானா ஆசாத் கல்வி அறக்கட்டளை உள்ளிட்ட சிறுபான்மை நிறுவனங்களின் சமூக பொருளாதார, கலாச்சார மற்றும் கல்வி நிலை தொடர்பான விஷயங்கள்.

(Xii) வஃப் சட்டம், 1995 (எண் 43) மற்றும் மத்திய வஃப் கவுன்சில்.

(Xiii) தர்கா க்வாஜா சாஹேப் சட்டம், 1955 (எண் 36).

xiv) தேசிய சிறுபான்மையினர் மேம்பாட்டு மற்றும் நிதி நிறுவனம் உட்பட சிறுபான்மையினர், நலனுக்கான திட்டங்களுக்கான நிதியளிப்பு.

(Xv) மத்திய மற்றும் மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையில் சிறுபான்மையினருக்காக வேலைவாய்ப்புகள்.

(XVI) சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகள் ஆலோசனையுடன் சிறுபான்மையினர் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளைப் பற்றிய அளவீடுகளை உருவாக்குவது.

(xvii) மத மற்றும் மொழி சிறுபான்மையினர் மத்தியில் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பிற்பட்ட பிரிவினருக்கான தேசிய ஆணையம்.

(xviii) சிறுபான்மையினருக்கான பிரதமரின் புதிய 15-அம்ச திட்டம்.

(XIX) சிறுபான்மை சமூகங்கள் தொடர்பான மற்ற பிரச்சனைகள்.

குறிப்பு:

பின்வரும் விஷயங்களில் வெளிவிவகாரத் துறை அமைச்சகம் செயலாற்றுகிறது;

1) ஹஜ் குழு சட்டம், 2002.

2) ஹஜ் குழு விதிகள், 2002.

3) மத்திய ஹஜ் குழு.

பின்வரும் விஷய்ங்களில் மனித வள மேம்பாட்டுத் துறை செயலாற்றுகிறது:

1) உருது மொழியை (NCPUL) ஊக்குவிப்பதற்கான தேசிய மன்றம்.

2) சிறுபான்மையினரின் கல்வி.

3) சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கான தேசிய ஆணையம்.

4) (SPQEM) மதரசாக்களில் தரமான கல்வி வழங்குதல் திட்டம்.

5) சிறுபான்மை நிறுவனங்களுக்கான (IDMI) உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்.

6) தனியார் உதவிப்பெறாத / உதவிபெறும் சிறுபான்மை நிறுவனங்களின் (தொடக்க, உயர்நிலைக்கல்வி/ மேல்நிலை பள்ளி) உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்.

7) குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வியுரிமைச் சட்டம் , 2009.